
# உப்புக்காற்றில் மலர்ந்த மலர்கள்



அ.கயல்விழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

தம் சந்தோசத்திற்காக
தங்கள் பிள்ளைகளின்
ஆற்றல்களை விலைபேசியும்
அவற்றிற்கு முடிச்சுப் போட்டும்
மூலையில் தள்ளிவிடும்
எத்தனையோ பெற்றோர்களின் மத்தியில்
எனது சந்தோசத்திற்காக
தம்மையே அற்பணித்து
எனக்குள் இருண்டு கிடந்த ஆற்றலை
வெளிச்சத்திற்கு கொண்டுவர
படாதபாடுபட்ட என்
அன்னை தந்தையின்
பாதங்களுக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | :- | உப்புக் காற்றில் மலர்ந்த மலர்கள் (கவிதைத் தொகுப்பு) |
| முதல் பதிப்பு | :- | 29-01-2011 |
| ஆசிரியர் | :- | அ. கயல்விழி<br>இன்பர்சிட்டி,<br>பருத்தித்துறை. |
| உரிமை | :- | ஆசிரியருக்கு |
| பதிப்பு | :- | S.P.M பிறின்ரேர்ஸ்,<br>செட்டித்தெரு, பருத்தித்துறை.<br>T.P.No: 0774966997 |
| வெளியீடு | :- | செல்வநாயகம் அருமைத்துரை |
| பக்கங்கள் | :- | xii + 31 |
| விலை | :- | 150/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே.....


| | பக்கம் |
|---|---|
| ❋ என் இறைவா | 01 |
| ❋ என் உயிரே | 02 |
| ❋ அம்மா | 03 |
| ❋ இறைக்கு நிகரான என் அப்பா | 04 |
| ❋ வெள்ளை மாளிகையில் மிளிர்ந்த கறுப்பு ரோஜா | 05 |
| ❋ யுத்த அரக்கனே | 06 |
| ❋ உணர்வுகள் எங்கே | 07 |
| ❋ மறக்க முடியாமல் | 08 |
| ❋ வாழையடி வாழை | 09 |
| ❋ பாதச்சுவடுகளின் ஓசை | 10 |
| ❋ எப்போது விடியும் | 11 |
| ❋ சமாதானத் தென்றலே | 12 |
| ❋ கடலா? காதலா? | 13 |
| ❋ கடலே வேண்டாம் சுனாமி வடிவில் | 14 |
| ❋ உண்மையே உரத்துச் சொல் | 15 |
| ❋ பெண்ணே | 16 |
| ❋ ரயில் பயணங்களில் | 17 |
| ❋ காதல் | 18 |
| ❋ நானும் ரோஜாவா | 19 |
| ❋ ரோஜாவின் கானம் I | 20 |
| ❋ ரோஜாவின் கானம் II | 21 |
| ❋ ரோஜாவின் கானம் III | 22 |
| ❋ அவள் | 23 |
| ❋ அவளால் | 24 |
| ❋ அவளுக்கு | 25 |
| ❋ அலையும் கரையும் | 26 |
| ❋ எனது ஊர் | 27 |
| ❋ யார்? | 28 |
| ❋ விசித்திர விஞ்ஞானமும் வீணாகும் கலாச்சாரமும் | 29 |
| ❋ அநாதை முதியவர் | 31 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



கவிதை இலக்கியம், தமிழ் இலக்கிய வரலாற்றின் ஆரம்பகாலப் பகுதிகளில் யாப்பிலக்கண மரபுகளை அனுசரித்ததாகவும், பாடு பொருள் கடவுள், அரசனைப் பற்றியதாக அமையவேண்டும் என்றவாறாகவும் இறுக்கமான ஒரு பின்னணியில் வளர்க்கப்பட்டு வந்ததாகும்.

20ம் நூற்றாண்டில் பாரதிக்குப் பின்னரேயே கவிதை இலக்கியம் மரபுகளை மீறியதாக, நவீன கவிதையாக எளியநடை, புதிய சந்தம் என்ற தன்மையில் தனிமனித உணர்வுகளைப் பிரதிபலிக்கும் ஓர் கலைவடிவமாக மிளிர்கின்றது.

கவிதைகள் வசன நடையில் பேச்சும் எழுத்தும் பெறமுடியாத ஒரு புதுமையினையும் இரசனையினையும் கொண்டதாக அமைகின்றன. இத்தகைய கவிதை நடை கவிஞனது கற்பனாசக்தி கவித்திறன் அறிவாற்றல் என்பனவற்றிற்கு அமைவாகவே சிறப்புப் பெறுகின்றது. ஓர் கவிஞன் கூறுகையில் "அழகிய சொற்களை நான் காதலிக்கின்றேன்" என்கிறான். இவ்வாறு அழகிய சொற்கள் கொண்டு கவிஞன் கவி புனையும் போது கவிஞனது உள்ளத்து உணர்வுகளும் சமுதாயத்திற்கு கவிஞன் கூற வந்த கருத்துக்களும் வாசகன் மனத்தில் நீங்காது இடம்பிடித்து விடுகின்றது.

கவிதை மொழிக்கு இத்தகைய தன்மையுடையதா என்று நினைக்கையில் "மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்" என்று பாரதி கவிதைச் சொல்லின்பம் வேண்டிநிற்றல் காணலாம்.

இவ்வாறாக சிறப்புப் பெறுகின்ற கவிதைகளின் தொகுப்பாக க.பொ.த.உயர்தரம் கலைப்பிரிவில் கல்விகற்கும் செல்வி அருமைத்துரை கயல்விழி அவர்கள் "உப்புக்காற்றில் மலர்ந்த மலர்கள்" என்ற கவிதைத் தொகுப்பாக தனது உள்ளத்து உணர்வுகளை எளிமையான சொற்கள் கொண்டு எளிய நடையில் எளிமையான சொற்கள் கொண்டு எளிய நடையில் எளிமையான சந்தத்துடன் படைத்திருப்பது நோக்குதற்குரிய தாகும். இயல்பாகவே இவர் கவிதை எழுதும் ஆற்றல் கொண்டவர். இவரது இவ் ஆற்றல் கண்டு வழிப்படுத்தியதற்கும் நெறிப்படுத்தியதற்கும் அமைவாக இக்கவிதைத் தொகுப்பு அமைவதையிட்டு பெருமகிழ்ச்சி யடைகின்றேன். இவரது படைப்புக்கள் மென்மேலும் வளரவேண்டும் என்றும் இவ்விடத்து வாழ்த்துகின்றேன்.

**திரு. சோ. சிவனேஸ்வரன்**
ஆசிரியர் B.A.Dip.in.Edu.
(யா/வல்வை சிதம்பராக்கல்லூரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையிலமைந்த ஓர் கலைவடிவமே கவிதையாகும். அந்த வகையில் செல்வி.அருமைத்துரை கயல்விழி தன் உள்ளத்து உணர்வுகளுக்கு உருக்கொடுத்த நிலையில் இக் கவிதைத் தொகுப்புத் திகழ்வதனைக் காணலாம்.

தொடர்ச்சியான மாறுதல்களுக்குட்பட்டுவரும் இவ்வுலகமதில் காலந்தோறும் மனித உணர்வுகளைத் தாங்கிவரும் பல்வேறு வகையான இலக்கிய வடிவங்களை கண்டோம். கவிதை இலக்கியத்தின் ஆரம்ப காலப்பகுதிகளை நோக்குவோமெனில் பாடுபொருள் வரையறுக்கப் பட்டதாகவும் யாப்பிலக்கண மரபு பின்பற்றப்பட்டதாகவும் அமைய வேண்டும் என்ற கடுமையான வரண்முறைகள் அமைந்தன.

இக்கவிதையமைப்பில் 20ம் நூற்றாண்டிற்கு ஏற்றவாறு, ஜனசமுதாய நிலைமைகளிற்கேற்றவாறு மனித உணர்வுகள் எதுவாயினும் எவ்வகையிலும் பாடலாம் என்ற புதுக்கவிதையமைப்பைக் கொண்டுவந்தவர் பாரதியார். அடுத்து பாரதிதாசன், கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை, கம்பதாசன், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை முதலானோரும் எளியபதம், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம் பொது சனங்கள் விரும்பும் மெட்டு என பொதுமக்களின் இன்பதுன்பங்களை வெளிப்படுத்த அவர்கள் வாயில் வழங்கும் உணர்ச்சிக் கலப்புடைய சொற்களை பயன்படுத்தி வந்தனர்.

அத்தகைய தன்மையில் எளியபதம், எளியநடை, எளிய சந்தம் தாங்கிய நிலையில் செல்வி அருமைத்துரை கயல்விழியின் "உப்புக்காற்றில் மலர்ந்த மலர்கள்" என்ற கவிதைத் தொகுப்பும் நோக்குதற்குரியதாகும்.

மனித சமுதாயத்தின் இயல்பான உணர்வு நிலையினை கள்ளங்கபடமற்ற தன்மையில் தனது கவிதைகளூடு மிகவும் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். உதாரணமாக "என் இறைவா......" என்னும் கவிதையில் வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்பம் வந்தால்
இறைவா என்றும்
துன்பம் வந்தால்
துஸ்டனே என்றும் சொல்லும்
துரோகிகளுக்காக நீ
துன்பப்படாதே"

என்ற கவிதை வரிகளும்

"அம்மா........." என்ற கவிதையில் தாயின் அன்பு நிலையினை புலப்படுத்தற்பொருட்டு

"அன்பு என்ற சொல்லுக்கு
அர்த்தமாகி......
இன்பத்திலும் துன்பத்திலும்
இன்முகங்காட்டி....... என்ற

கவிதை வரிகளும்

"யுத்த அரக்கனே!" என்னும் கவிதையில் யுத்தத்தின் கொடுமையினைப் புலப்படுத்தற் பொருட்டு "ஊரிழந்து உரிமையிழந்து
உறவிழந்து உயிரிழந்து
நிம்மதியை நாமிழந்து
நித்தம் நித்தம் வாழ்விழந்தோம்" என்ற

கவிதை வரிகளும் எடுத்து நோக்குதற்குரியதாகும்.

இத்தகைய தன்மையில் எளியபதம், எளியநடை, எளிய சந்தம் கொண்டு மனித சமுதாய உணர்வு நிலைகளைத் தாங்கியதான இவரது கவிதை ஆக்கங்கள் மென்மேலும் வளர வேண்டுமன்று வாழ்த்துகின்றேன்.

**வாழிய கவிஞர்!**

**வளர்க இவர்தம் கவிதை ஆக்கங்கள்.**

சைவப்புலவர்

–தங்கராசா சக்திவேல் B.A-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



இந்த இளம் குயில் கூவுமா? கவிதை பாடுமா?
வண்ண வண்ண மலர்கள் பூத்துக்குலுங்கி
இளம் தென்றலிலே அசைந்தாடி
நறுமணம் வீசும் கவிதைச் சோலையிலே
இதோ.......

ஒரு இளங்கவிஞர் அருமைத்துரை கயல்விழி கிழக்குத் திசையில் உதயமாகிக் கொண்டிருக்கும் இளஞ் சூரியன்.
மின்னாமல் முழங்காமல் வருகின்ற மழை போல்
எம் நெஞ்சம் குளிர, தலை நிமிர
கண்கள் விழிக்க, கண்கள் பனிக்க
அழகு தமிழால், எல்லாம் வல்ல இறைவனுக்கும்
தன்னை ஈன்ற தாய் தந்தையர்க்கும்
கவிதைச்சரம் தொடுத்து தன் உள்ளம் நெகிழ்கின்றார்
அது மட்டுமல்ல இவர் தன் திறமையினால்
சொல் வன்மையினால்
கருத்தாழமிக்க கவிதைகளால் எல்லாத் துறையிலும் புகுந்து
போர் என்றும் உணர்வு என்றும்
காதல் என்றும் பிரிவு என்றும்
உண்மை என்றும் சமாதானம் என்றும்
மண் என்றும் விடியல் என்றும்
தன் கவிதைகளால் அலசி ஆராய்ந்திருக்கிறார்.
தன் அனுபவத்திலும் பார்க்க தன் அறிவால்
கவிதை மணம் கமழ்கின்றார். வான் உயர நிற்கின்றார்.
அவர் தமிழில் , அவர் கவிதையில் சொல்வதனால்
தமிழ் தமிழ் என எம் மூச்சுள்ளவரை
மூச்சில் இறுதிக் காற்றுள்ளவரை....
எம் கருத்தை சொல்வதானால் எம் உள்ளம்
உறுதியாகச் சொல்கின்றது
கவிதைச் சோலையிலே இந்த இளம் குயில் கூவுமா?
கவிதை பாடுமா?
நிச்சயம் கூவும். இதன் குரல் எதிர்காலத்தில் எட்டுத் திக்கும் ஒலிக்கும்.
கவிதை மழை பொழியும்.

கயல்விழியை வாழ்த்தி நிற்கும்
**அன்பிலகலா பொ.மகாதேவா**
பரு.கலைஞர் வட்டம் – பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



உப்புக் கடலோரம்
வெண்மலர்க் கரையோரம்
துளிர்கின்ற செடியாகி
அழகான மலராக மலர்கின்ற
கவிதைகளின் உறவான
சிறுமலர்தான்
"அருமைத்துரை கயல்விழி"
மாதா, பிதா , தான்
தன் குருவான தெய்வங்கள் என்று
தன் கவிதைத் தொகுப்பினிலே விளித்திருக்கும்
கலைப்பிரிவு உயர்தர மாணவி "கயல்விழி"
துணிவைத் துணையாக்கி
சமூகச் சீர்கேட்டை
துணிவாய்க் கவியாக்கி
முடிந்து விட்ட காலத்தின்
கோரப் பிடிக்குள்
நாம் சிக்கித் தவித்த அந்நாளை
மனக்கண் முன் மிளிரவைத்து
கண் பனிக்க வைத்த கதாநாயகிதான்
கயல்விழி
பெற்றோரும் உற்றோரும்
ஊராரும் வியந்திடவே
தன்
முயற்சியின் உயர்ச்சியால்
நிமிர்ந்து நிற்கும் கயல்விழியை வாழ்த்துகிறேன்.
தமிழ்மேல் காதல் கொண்டாய்
மண்மேல் மாறாத பாசம் வைத்தாய்
தலைமுறைகள் தழைத்திடவே - உன்
மிடுக்கான மொழிநடையால்
மிதந்து நிற்கும் உன்
சுவையான கவிதைத் தொகுப்பு
உயர்த்திடவே என்றும் என் ஆசிகளும் வாழ்த்துக்களும்
"உயர்வான இறை ஆசி, என்றும் உனக்காக"

**வாழ்க, வளர்க!**

வாழ்த்தும்
**மா. இரத்தினசோதி**
வடமாகாண கராத்தே சங்க தலைவரும்,
யோகாப்பயிற்சி ஆசிரியரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிகவி

இளம் புலமை இதுவாவென
மனம் கிலகித்தேன்
இலகுதமிழ் இதுவன்றோ
இளநிலை
பழகுதமிழ் பாவென்று பாடினீரே
முத்தமிழ் புலவர் செந்நாவலரின்
அறம் பொருள் இன்பம் வீடு என்பன
புறம்தமிழில் புகழ்ந்திடக் கண்டேன்
புதுமைக்கவி புதுக்கவிதையில்
பெருமைதனை அள்ளிவீசிய அழகுச்சோலைதனை
பெருகுக பெருகு தமிழ் வளநிலை
வார்த்தையில்லை இதைவிட வாழ்த்த
வாழ்ந்திடுவீர் வாழ்வாங்கு மேலும்
வரகவியாக நீடுநிலைபெற்று
இன்பர்சிட்டி மாவூரின் நித்திலமே
நிகரில்லா எதிர்கால வளர்கவி.

ஆசிகவி வழங்கியவர்
மருத்துவர் (பூச்சியல் ஆய்வாளர்)
**பொன்மயில் இராசதுரை**
இன்பர்சிட்டி.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

பள்ளிப்பருவத்தில் படைப்பாற்றலை வளர்த்தெடுத்தல் ஒரு முக்கிய மொழித்திறனாகும். இவ்வகையில் எனது மாணவி செல்வி அருமைத்துரை கயல்விழி அவர்களின் இக்கவிதைகளை வாசிக்கும் போது பிரகாசமான எதிர்காலம் துளிர்விடுவதை அறிகின்றேன். தம் மனதில் தோன்றிய சிந்தனைகளையும் உணர்வுகளையும் தமக்குத் தோன்றிய ஒரு வடிவத்தில் வெளியிட்டிருக்கிறார். தனிமனிதனின் நடப்பு சமுதாய நடப்பில் சில புதிய போக்குகள் ஏற்பட்டிருப்பது போல இவ்விளங்கவிஞரும் தனது ஆற்றலுக்கும் ஆளுமைக்கும் ஏற்றாற்போல உருவ உள்ளடக்கத்தில் கவனம் செலுத்தியிருக்கிறார். சொற்சிக்கனம், பேச்சோசைப்பாங்கு, உடன் நிகழ்கால உணர்வு, போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளித்துள்ளார். ஆசை - ஆதங்கம், இலட்சியம் -நட்பு, உண்மை - போலி என்ற இரு துருவ மனப்பாங்குகளிலே சஞ்சரித்து கருத்து ஒத்திசைவோடு எழுதப்பட்டுள்ளது. இவரது எதிர்காலம் சிறக்க என் ஆசிகள்.

**கிருஸ்ணபிள்ளை நடராசா**
முன்னாள் அதிபர்
உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



இன்பர்சிட்டி கிராமத்தில் சாதனைப் பெண்கள் வரிசையில் செல்வி.அருமைத்துரை கயல்விழி தற்போது திகழ்கின்றாள் என்றால் மிகையாகாது. இவள் சேற்றில் மலர்ந்த செந்தாமரையாக கடலோரக் காற்றில் வாழ்ந்தாலும் இனிய கவிபாடும் ஆற்றலைப் பெற்றமை இறைநல் ஆசி என்றே கூற வேண்டும். கலைப்பிரிவு உயர்தரத்தில் கல்வி பயிலும் கயல்விழி பாசம், அன்பு, காதல், துன்பம், ஏமாற்றம், வீரம் என்று பல்துறைகளிலும் தன் கவி ஆற்றலை விரித்துள்ளமை போற்றுதற்குரியதே. இச்சிறுவயதில் தன் கவிதைகள் மூலம் முதிர்ந்த நல் அறிவு, கற்பனைத்திறன், எழுத்துநடை போன்றவற்றை வெளிப்படுத்தி உள்ளார். அவரின் முதல் பிரசவம் இது. இது போல் பல வெளியீடுகள் மலரவேண்டும். எமது கிராமத்திற்கு இது பெருமை. அவர் பெருமுயற்சி வளர காண்டீபன் விளையாட்டுக்கழகம் சார்பிலும் , இன்பர்சிட்டி கிராமமக்கள் சார்பிலும் வாழ்க வளர்க என நல் ஆசி கூறி நிற்கின்றேன்.

வாழ்த்தும்
**S. சந்திரமோகன்**
தலைவர்
காண்டீபன் விளையாட்டுக் கழகம்,
இன்பர்சிட்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



இறைவன் அருள் வேண்டி
இளங்கவிஞர் கயல்விழியின்
இளங்கவிதையின் புகழோங்க
இன்பர்சிட்டி கடற்றொழில் சங்கத்தினர்
இனிமையாய் வாழ்த்துகின்றோம்.

கவிதையில் ஆரம்பமே கடவுளின் வரிகள்
அதுவே அதற்கோர் உயர்வாகும்
இம்முயற்சி எழிற்சியாய்
இம்மண்ணில் விருட்சமாய்
இளங்கவிஞர் பேர் ஓங்க
இன்பர்சிட்டி மக்கள் யாம்
இக்கவிதை உயர்ந்திடவே
என்றென்றும் வளம்பெற வாழ்த்துகின்றோம்.
"வாழ்க கயல்விழி வளர்க அவர் தம் கவிதை"

தலைவர்,
நிர்வாக உறுப்பினர்கள்,
கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
இன்பர்சிட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



அருமைத்துரையின் அருமந்தபுத்திரி கயல்விழி
எழுதிய கவிதைகளா இவை! "என் இறைவா"
தொடங்கி "அநாதை முதியவர்" வரை யதார்த்தமான
சகலதையும் தொட்டு குறிப்பாக எமதூரை பற்றி
"கடுஞ் சொற்களை காதால் கூட கேளாத
கம்பர்கள் வாழ்ந்த ஊரடா இது" என
விழித்திருப்பதைப் படித்து பெருமிதமடைந்தேன்.
இதே போன்ற இன்னும் பல ஆக்கங்களைத்
தொடர்ந்தும் எழுதி எமதூருக்குப் பெருமை சேர்க்க
வேண்டுமென எல்லாம் வல்ல கற்பூர விநாயகனை
வேண்டி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

**வே. செந்திவேல்**
கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர்,
இன்பர்சிட்டி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



சுற்றும் பூமிதன்னில்
சுற்றத்தார்கூட நிரந்தரமில்லை
நிலையில்லா வாழ்க்கையிலே
எதிர்ப்பும் ஏமாற்றமும் அதனுடன் கூடிய
எதிர்பார்ப்பும்
இத்தனைக்குமிடையில்
எந்தவித எதிர்பார்ப்புமின்றி
எனக்குள்ளிருந்த
இயலாமை என்ற
இருளை நீக்கி எனக்கு
ஒளிகொடுத்து
"உப்புக்காற்றில் மலர்ந்த மலர்கள்" என்ற
கவிதைத் தொகுப்பினை
உருவாக்குவதற்கு
ஊன்றுகோலாயிருந்த
இறைவனுக்கே நிகரான
என் அப்பாவிற்கு
என் முதற்கண் நன்றிகள்.

கவிதை என்பது "கற்பனையாலேயே" உருவாகிறது, என்றும் அதனால் "கவிதைக்கு கற்பனையே உயிர்நாடி" என்றும் சொல்லுவோர் பலர் உளர். அந்த வகையில் என் கவிதைகளில் சில கற்பனையில் உருவானவையாக இருந்தாலும் மற்றவையெல்லாம் உண்மை என்றே சொல்ல வேண்டும்.

ஒரு கவிஞன் என்ற முறையில் நான் "கவிதை" என்பதற்கு, "கவிதை" என்ற சொல்லில் "க" என்ற எழுத்தை நீக்கினால் "விதை" என்ற சொல்லும், "வி" என்ற எழுத்தை நீக்கினால் "கதை" என்ற சொல்லும், "தை" என்ற எழுத்தை நீக்கினால் "கவி" என்ற சொல்லும் பெறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது "கவிதை" என்பது வாசகர்களின் மனதில் "கவி" போல இனிமையாகவும் "கதை" போல சுவாரஸ்யமாகவும் விதை போல அதன் இனிமையும் சுாவரஸ்யமும் வளர்ந்து செல்ல வேண்டும் என்பதே என் அறிவிற்கெட்டிய விளக்கமாகும்.

அந்த வகையில் கவிஞன் என்பதை விட உணர்ச்சிகள் உள்ள ஒரு மனிதன் என்ற வகையில் என் உணர்ச்சிகளுக்கு உயிர்கொடுத்து எழுத்து மூலமாக உருப்பெற வைத்துள்ளேன்.

என் கன்னிக்கவிதைகளில் என்னையறியாமலேயே சில தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். அவற்றை மன்னிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் உங்கள் விமர்சனங்களைக் கூறி என் முயற்சிக்கு உந்து சக்தியாக இருக்க வேண்டுமென்று வாசகர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

அதுமட்டுமன்றி இது எனது முதல் முயற்சியாகையால் உங்கள் எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும் கிடைக்காமல் போய்விடலாம். ஆனால் தொடரப்போகும் என் முயற்சியில் உங்கள் எதிர்பார்ப்புகளும் உருப்பெறும் என நம்புகின்றேன்.

அ. கயல்விழி
கலைப்பிரிவு
யா/வடஇந்து மகளிர்கல்லூரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இறைவா.....



உலகிற்கோர் ஆரம்பமாய்
உயிர்களுக்கு அன்னையாய்
உன்னதமாய் நாம் வாழ
உறவுகளைப் படைத்து விட்டு
உம் பார்வையை எம்
உள்ளங்களில் நிறுத்திவிட்டு
உருவமாய் நீயிருக்க
உன்னையே "கல்" என்று சொல்லிவிட்டு
இன்பம் வந்தால்
இறைவா என்றும்
துன்பம் வந்தால்
துஸ்டனே என்றும் சொல்லும்
துரோகிகளுக்காக நீ துன்பப்படாதே
உன் சிறுபிள்ளை
நான் வடிக்கும்
சிறு கவிதைகளை
உனக்கு சமர்ப்பிக்கிறேன்
எனக்கொரு ஏற்புரை சொல்வாயா?
என் இறைவா....



**உதயம்**

ஒன்றின் முடிவு இன்னொன்றின் ஆரம்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உயிரே.....



முத்தாய் விளங்கும் நம் நாட்டில்
முதலிடம் வகிக்கும்
தண்மணம் வீசும்
தமிழே என் உயிரே.....
தலை வணங்கி நிற்கிறேன் என்
தலைமுறை வரையிலும் உனக்கு
சித்திரம் வரைய சுவர் வேண்டுமானால்
சிலை வடிக்க சிற்பி வேண்டுமானால்
அழும் குழந்தைக்கு ஆராரோ பாட
அன்னை வேண்டுமானால்
ஆசையோடு ஏங்கும்
ஆண் மகற்கு
கவரிமான் போல்
கன்னி வேண்டுமானால்
தமிழ் நெஞ்சங்களினது
தாகத்தை தீர்க்க
தட்டுப் பாடற்ற
தமிழ் மொழி வேண்டுமானால்
தமிழ்...... தமிழ் என எம் மூச்சுள்ளவரை
மூச்சின் இறுதிக் காற்றுள்ளவரை
தமிழுக்கு உயிர் கொடுப்போம்.

**நாளை**

தொடர்ந்து கொண்டிருக்கும்
ஆனால் தொடக்கமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ..ம்..மா.



அன்பு என்ற சொல்லுக்கு
அர்த்தமாகி - என்
ஆசைகள் அனைத்திற்கும்
ஆறுதலாகி - உன்
இன்பத்திலும் துன்பத்திலும்
இன்முகம் காட்டி
ஈரைந்து மாதங்கள் - நீ
ஈன்றெடுத்த எனக்காக
உன்னையே உருக்கிக் கொண்டு
எத்தனை வருடங்கள்
எனக்காக வாழ்ந்து விட்டாய்
எதற்கும் நிகரில்லாத
என் அன்னையே
இன்று முதல்
இந்த அடிமை
உனக்காக உன் சேவைக்காக
இறைவனிடம் வேண்டுகிறேன்
இன்னொரு ஜென்மம்
நான் உனக்கு அன்னையாகி - என்
வாழ் நாள் முழுதும்
சேவை செய்ய.....

**தனிமை**

கொடுமையானது ஆனால்
நிரந்தரமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைக்கு நிகரான என் அப்பா



அறிவிற்கே இலக்கணமான
அன்னையின் வடிவமே
அரவணைப்பில் ஆசானாய்
அறத்தின் உருவமாய் - நான்
பிறந்தபோது அன்னையாய்
வளரும் போது தந்தையாய் - கல்வி
பயிலும் போது குருவாய்
பள்ளி செல்லும் போது தோழியாய்
வணங்கும் போது தெய்வமாய் - நான்
வளம்பட அதிகாரியாய்
சஞ்சலப்படும் போது சிநேகிதனாய்
சந்தோசப்படும் போது ரசிகனாய்
இருக்கும் என் இறைவா
உனக்கு நன்றி சொல்ல
என் ஒரு "நா" போதாது

**கண்ணீர்**

உணர்ச்சியின் வெளிப்பாடு
ஆனால்
அதிகமாக பெண்களுக்கே
சொந்தமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை மாளிகையில் மிளிர்ந்த கறுப்பு ரோஜா




சேற்றின் மத்தியில் பூத்த
செந்தாமரையோ! இல்லை
பாறையில் விளைந்த
பளிங்குருவோ
ஒரு கால கட்டத்தில்
ஒதுக்கி வைக்கப்பட்டும்
அடிமைகளாகக் கருதி
அடக்கி வைக்கப்பட்டிருந்த
இழிவான குலமென்று சொல்லிய குலத்திலே
இதழ் குவிந்திருந்த ஒரு கறுப்பு ரோஜா
உலக வரலாற்றிலே
வல்லரசுகளில் வல்லரசாக
மல்லிகையை விட
மணம்பரப்பி மொட்ட விழ்ந்து
மலரத் தொடங்கியது
அதன் புகழ் மணம்
பாரெங்கிலும் பட்டொளி வீசி
பரவத் தொடங்கியது
வெள்ளை மாளிகையை
அனுபவித்த ரோஜாக்களில்
இன்று ஒரு கறுப்பு ரோஜா
மிளிர்ந்து கொண்டிருக்கிறது
யாருமே நினைக்காத ஓர்
உன்னதமான உயர்வை
இன்று இந்த ரோஜா பெற்று
புகழடைகின்றது - அன்று
தம் இனத்தவரை
வெறுத்தவர்களின் நெஞ்சங்களில் கூட
அவர்கள் பெருமிதமடையும் வகையில்
செயலாற்றி அவர்கள் மனதையும்
கொள்ளை கொண்ட
வெள்ளை மாளிகையில் மிளிர்ந்த
கறுப்பு ரோஜா இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த அரக்கனே



பல்லாண்டு காலமாய்
பரிதவிக்கும் உயிரினங்கள்
மனிதர்கள் மட்டுமல்ல
மந்தைகளும் சேர்ந்து தான்
சொந்த நாட்டில் வாழும்
சொர்க்கத்தை விட்டு விட்டு
அந்நியனின் நாட்டைப் போல்
அகதிகளாய் நாமிருக்க
என்ன பாவம் செய்தோம்
எம் நிம்மதியை நீபறிக்க
ஊரிழந்து உரிமையிழந்து
உறவிழந்து உயிரிழந்து
நிம்மதியை நாமிழந்து
நித்தம் நித்தம் வாழ்விழந்தோம்
யுத்தம் என்னும் பெயரிலே - பல
யுகங்களாய் நீ இருப்பதால்
சத்தியமாய் சொல்லுகிறோம்
சத்தமிட்டுக் கூவுகிறோம் - இந்த
நிமிடத்தில் நீ போய் விடு
நிம்மதியாய் எம்மை வாழவிடு

**கண்ணாடி**

கண்ணுக்குத் தெரியும் மனச்சாட்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உணர்வுகள் எங்கே



துப்பாக்கிக் குண்டுகளின்
சொடுக்குச் சத்தத்திற்கிடையிலும்
மனிதச் செடிகளில்
வளர்ந்து விட்ட ஜாதி முட்களில்
சிக்கித் தவிக்கும் ரோஜாக்களே
நீங்கள் நினைத்தால்
முட்களைக்கூட மலராக்கலாம்
குழி தோண்டிப் புதைக்கப்பட்ட
உங்கள் உணர்வுகள் எங்கே?
மீண்டும் தொடங்குங்கள்...
தொடரட்டும் உங்கள் முயற்சி.

**மனித வாழ்க்கை**


முள்ளில் ரோஜா போன்றது ஆனால்
அதை பூந்தோட்டமாக்குவதும்
முட்காடாக்குவதும்
மனிதர்களது கையில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாமல்



"ஓ" என்ற இரைச்சலுடன்
எம் தலைக்கு மேலே
ஒரு சத்தம்
எம்மை யறியாமலேயே
எத்தனித்துப் பார்த்தோம்
கதி கலங்கிப் போய்
தட்டுத் தடுமாறி
ஒருவரை ஒருவர் பிரிந்து
ஓடிச் சென்று விட்டோம்
ஒரு நொடிதானும் செல்லவில்லை
ஓராயிரம் ஓலக்குரல்கள் கேட்டன
சத்தங் கேட்கிற தென்று சொன்னவர்களெல்லாம்
சடலமாய்க் கிடந்தார்கள்
சங்கின் ஒலிகூட இல்லாமல்
அடக்கம் செய்து விட்டு
அகதிகளாய் வந்திருக்கிறோம் ஆனால்
அந்தக் கணத்தை எம்மால்
இந்தக் கணம் வரையிலும் மறக்க முடியவில்லை.

**வேலி**

மற்றவர்கள் போடுவதை விட நமக்கு நாமே
போட்டுக் கொண்டால் மரியாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழையடி வாழை

குளிப்பதற்காக
கிணற்றடிக்குச் சென்றவன்
திகைத்துப் போய்
திணறிக் கொண்டு ஓடி வந்தான்
வந்தவன் வசனத்தை மறந்து
வாயடைத்து நின்றான்
வினவினேன் அவனிடம்
நேற்று முன்தினம்
குலை போட்டு நின்ற வாழையை
இன்று காணவில்லை
பதற்றத்துடன் சொன்னான்
எமக்கு குலையை தந்து விட்டு
தன் தலையை இழந்து விட்டது என்றேன்
நான் சொன்னது
வாழையை மட்டுமல்ல
வாழையடி வாழையாய்
இன்றும் எம்மோடு
வாழ்ந்து கொண்டிருக்கும் - நம்
வம்சத்தவர்களையும் தான்.

முகவரி

நம்மை விட மற்றவர்கள்
அதிகமாக பயன்படுத்துவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதச்சுவடுகளின் ஓசை.....

அகிலத்தையே சுற்றிப் பார்ப்பதற்காக
ஆகாயத்திலே வட்டமிட்டுக் கொண்டிருக்கும்
விமானத்திலே
மானமிழந்தவனாய் எட்டிப் பார்க்கின்றேன்
பயணியாய் அல்ல அவர்களின்
பாதணிகளுக்கு காவலனாய்
பாவப்பட்ட என்
பாதச் சுவடுகளின் ஓசை இது....
வழிமேலே விழி வைத்து
என் வருகையை
எதிர் பார்த்துக் கொண்டிருக்கும்
என் மனைவியின் வயிற்றுப் பசியைக் கூட
என்னால் தீர்க்க முடியவில்லையே - அவள்
வயிற்றில் வளரும்
என் வாரிசு கூட
இந்த உலகத்தை
எட்டிப் பார்க்கப் போகிறான்
அவன் கூட
உணவின்றி உயிர் வாழுவானா?

முகத்தின் அழகு

மனத்தைப் பொறுத்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்போது விடியும்



வீதியோரம் நடந்து கொண்டே
வீசும் தென்றல் காற்றை
ரசிக்க முடியாமல்
விம்முகிறது அவன் மனம்
என்னை நம்பி வந்தவள்
தனக் கென்று எதையுமே
எடுத்துக் கொள்ளாமல்
எமனோடு சென்று விட்டாள்
தாயை இழந்த - என்
தனையன்
கல்வியை விட்டு விட்டு
கால் வயிற்றுச் சோற்றுக்காக
கல்லைச் சுமக்கிறான்
இதை யெல்லாம்
மூடிமறைத்து விட்டு
எதுவுமே தெரியாதவனாய்
என்னுள் நானே
புலம்பிக் கொண்டிருக்கிறேன்
ஒரு பிச்சைக் காரனாய்
என்றாவது ஒரு நாள்
எனது பொழுதும்
விடியும் என்ற நம்பிக்கையில்
என்போன்ற ஏழைகளின்
உணர்வுகள்தான் ஒதுக்கப்பட்ட தென்றால்
உயிரும் கூடவா ஒதுக்கி வைக்கப்பட்டது.

**ஏமாற்றம் :** நாமாக தேடிக் கொள்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத் தென்றலே

இயற்கையின் வடிவமாம்
இந்து சமுத்திரம் - அதன்
நித்திலமாய் விளங்கும் நம்
நிமிர்ந்த நன்னாடு
அழகின் உறைவிடமாய்
அன்பின் ஊற்றாய் விளக்கும்
இலங்கை யென்னும்
இதயத்திலே - அன்று
அமைதியாய் இருந்தவர்கள் - இன்று
அழிந்து விட்டார்கள்
இன்று தம் சுயநலத்திற்காக
மற்றவர்கள் சுதந்திரத்தை பறிக்கிறார்கள்
பொறுமையை தொலைத்து விட்டு
பொறாமையை தேடுகிறார்கள்
குரோதமான பார்வை
குதற்கமான பேச்சு
கள்ளமான உள்ளம்
கபடமான வாழ்க்கை
இப்படியென்றால் எப்படி வரப் போகிறது சமாதானம்
வேண்டுமானால் சமாதானத் தென்றலே.....
சற்று எம்மையும் திருப்பிப்பார் என்று குரல் கொடுக்கலாம்.

**அம்மா**

இனிமையான உறவு அதன் இதயம்
நோகவைத்தால் எந்த ஜென்மத்திலும்
விமோசனம் கிடையாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலா? காதலா?



அலை அலையாய் வந்து
அலை மோதும் அழகென்ன!
ஆழமாய் இருந்தாலும்
ஆண்டவனின் படைப்பென்ன!!
இயற்கை யென்னும் பெயரிலே
இன்னிசைக்கும் கடலோசை
ஈசான மூலை யெங்கும்
ஈர்த் தெடுக்கும் தன்னிசையால்
உலகெல்லாம் சூழ்ந்திருந்து
உவமைக்கோர் உதாரணமாய்
ஊர்ந்து திரிவன முதல்
ஊர்தியில் செல்லும் உயிர்கள் வரை
எல்லோர் மனதிலும் - ஓர்
எண்ணம் தோன்ற
ஏதோ ஒரு கீதத்தோடு
ஏங்க வைக்கும் சங்கீதத் தோடு - என்னை
ஐக்கிய மாக்கியவளே
உன்னை நான் கடல் என்று சொல்லட்டுமா
இல்லை
கடலே என் காதல் என்று சொல்லட்டுமா?


**மழை**

இன்பத்தில் இன்பமாகவும்
துன்பத்தில் துன்பமாகவும்
இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலே வேண்டாம் சுனாமி வடிவில்



இயற்கை என்னும் பெயரிலே
இங்கு ஏன் வந்தாய்?
அதிர்ந்து கொள்ளும்
அலைகளுக் கிடையில்
ஆழமான ஆழியிலிருந்து வந்த
ஆட்டக்காரியே!
ஈரமுள்ள இறைவன் தான் இந்த
ஈனமான செயலையும் செய்தானோ?
உயிர்களை ஊனமாக்கி
ஊதாரித்தனம் செய்த நீ
இன்றும் சரி என்றும் சரி
எமக்கு வேண்டவே வேண்டாம்
சுனாமி வடிவில்......

**வீடு**

குடும்பத்தை பொறுத்து
கோயிலாகவும் மாறலாம்
காடாகவும் மாறலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையே உரத்துச் சொல்

உண்மையே! இவ் வையத்தின்
உயிர் நாடியே!!
மாயையினுள் மறைந்திருக்கும் உன்னை
நான் எப்படி உணருவது
உனது நிறம் தான் யாதோ?
வஞ்சகமில்லா நெஞ்சங்களுக்கு
உவமிக்கப்படும் வெள்ளை நிறமா? நீ
இல்லை
உலகென்று பெற்றவரை சுற்றி வந்த
உத்தம புத்திரனுக்கு கிடைத்த
மாம்பழத்தின் மஞ்சள் நிறமா? நீ
இல்லை
கார்மேக மென்று உவமிக்கப் படும்
கன்னியர் கூந்தலின் கறுப்பு நிறமா? நீ
இல்லை
காதலைச் சொல்லிய
காதலனுக்கு
காதலி காட்டும்
வெற்றிக் கொடியின்
பச்சை நிறமா? நீ
இல்லை
இச்சையோடு நம்மவர்கள்
ரசிக்கும்
இரவு வானில் நீலநிறமா? நீ
உன் நிறத்தை
நீயே! உரத்துச் சொல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணே.....



பெண் ணென்றால்
பெருமை தான்
பூமியை விட பொறுமைதான்
தாய் என்னும் பெயரிலே
தரணியையே வளர்க்கிறாய்
தாரம் என்னும் பெயரிலே
தாங்க முடியாத சுமைகளை சுமக்கின்றாய்
பெண் எனும் பெயரில்
பெருமையை மட்டுமல்ல
பொறுமையாகவும் இருந்து
பொல்லாத உலகுதனில்
பொலிவுற்றாய் எதற்காக
பொங்கி எழுவதற்கா - இல்லை
போதைப் பொருளாகி
போக்குவரத்தில் மலிவதற்கா?

**கடவுள்**

நம் பார்வையை பொறுத்த உருவம்
ஆனால்
உண்மையில் உருவம் இல்லாதவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் பயணங்களில்

தொடர்ந்து கொண்டிருக்கும்
ரயில் பயணங்களில்
முடிந்து விட்ட
என் வாழ்க்கைப் பயணத்தை
மீட்டுப் பார்க்கிறேன்..... மீண்டும்
என்
இளமையின் வேகத்தை இடை நிறுத்திய
அந்த சூனியக்காரி ஆடிய
சூதாட்டத்திலே தோற்றுப் போனவனாய்
நான்.....
கண்ணிலே கனவுகளோடு
கற்பனையிலே மூழ்கியவனாய்
உறவைத் தேடி வந்த எனக்கு
உயிரிலே இடி விழுந்தது அவளால்.....
உடன் பிறப்புக்களின் உயிர் மட்டுமா
உடலைக்கூட காவு கொண்ட அவளை
இன்னமும் காதலிக்கிறேன்
ஏன் தெரியுமா
இனிமேலாவது என்னையும் அணைக்கட்டும்
என்ற ஏக்கத்தில்.

**கைக்குட்டை**

நிரந்தரமான பொதுநலவாதி /
சேவகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல்



எண்ணிரண்டு வருடங்கள்
எந்த வித சலனமுமின்றி
ஏட்டுக் கல்விதனை
ஏற்றமுடன் கற்றாயே - இன்று
உயர் தர கல்வி கற்கும்
உன்னத நிலையிலே
உனக்குள்ளே கலந்தது யார்?
உன் இதயத்தை இரண்டாக்கி
இருவரை ஒருவராக்கி
இடிபோல உன்னுள் நுழைந்தது யார்?
கவிதையின் வடிவமே.....
கன்னியின் உருவமே..... என்று
கவிதை மொழி பேசி
களங்கமற்ற உன்மனதில்
ஆசையை வளர்த்தது யார்?
அவாவை தூண்டியது யார்?
எல்லாம் வயது என்னும் பெயரால் வந்த
ஏமாற்றம் தான்
அதற்குக் கூட காதல் என்று பெயர் வைத்துவிட்டனர்
அடி முட்டாள்கள்.

**கவிதை**

இரசிக்கத் தெரிந்தவனுக்கு
இனிக்கும்
இரசனை இல்லாதவனை
குழப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் ரோஜாவா?



விடியலின் நினைவாக
வீட்டு முற்றத்தில்
விரிந் திருக்கும் ரோஜாவை
வியப்புடன் பார்க்கின்றேன்
இறைவனுக்கே சமர்ப்பணமா
இல்லை
இளகிய கன்னியரின்
இளமைக்கே நிகரா
எது வென்று சொல்ல முடியவில்லை
என்னால், ஆனால்
ஒன்று மட்டும் சொல்வேன்
ரோஜாவைப் போல தான் நானும்
நாளை என் நிலமை என்ன என்பதை
மறந்து விட்டு
மற்றவரின் ரசனைக்காக
மகிழ்ச்சித் தென்றலுடன்
சேர்ந்து தள்ளாடுகிறேன்.

**கனவு**

காணும் வரை சுகம்
கண் விழித்ததும் சோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோஜாவின் கானம் - I

ரோஜாவில் தேன்குடிக்
ஆசைப்பட்ட வண்டு
ரோஜாமீது இருந்தால்
முள்குத்தும் என்பதற்காக
அருகிலிருந்த
மல்லிகையில் தேன்அருந்த
சென்றது.
மல்லிகையில் ஏற்கனவே
தேனை சில வண்டுகள்
அருந்தி விட்டதால்
மீண்டும் ரோஜாவைத் தே
வந்தது வண்டு
இப்பொழுது
வண்டுக்கு ரோஜாமீது
காதல்
ஆனால்
ரோஜாவிற்கு
அடிக்கடி வந்துபோகும்
வண்டை விட
அது போன்ற
சந்தர்ப்பவாதிகளிடமிருந்து
தன்னை
எப்பொழுதும் காப்பாற்றிக் கொள்ளும்
முள்ளின் மீது காதல்..



**மௌனம்**

சுமைகளைத் தாங்கும் சுமான மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோஜாவின் கானம் - II



தோட்டத்து ரோஜாக்களெல்லாம்
தோற்றத்தில் ஒன்றாயிருந்தாலும்
அவற்றின் வருடலினால்
அவற்றை திருடிச் செல்லும்
வண்டுகள் ஒன்றாயில்லையே.
அதற்காக
திருடப்பட்ட ரோஜாக்களை
திட்டுவதில் என்ன பயன்
ரோஜாவாக பிறந்து விட்டால்
வண்டுகள் திருடத்தான் செய்யும்
களவாடப்பட்ட ரோஜாவின்
கண்ணீர்
முட்களைக் கூட
நனைக்கவில்லை போலும்
அதனால் தான்
முட்கள் கூட
ரோஜாவை தைக்கிறது

**காதல்**


உணர்ச்சியின் தோற்றம்
உண்மையாவதும் போலியாவதும்
காதலர்கள் கையில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோஜாவின் கானம் - III



மனதோடி உறவாடி
விழியோடு கதைகூறி
கனவோடு தினந்தேடி
கண்ணீரில் போராடி
மலையோடு பனிமோதி
பனிமீது நீராடி
பாலைவனாந்தரத்தில்
பசித்திருக்க
பசிதீர்க்க கொண்டுவந்த
பச்சைத் தண்ணீர் கூட
வற்றிப் போக
வரவோடு எதிர்பார்த்தவள்
வராமல் போக
எதிர்பாராமலேயே
எதையோ தேடி
போகிறது என் ஜீவன்.

### கல்வி

கடல் போன்றது
இறங்குவது சுலபம்
இடையில் வந்து கரையிலிருப்பதும்
இறுதிவரை போராடுவதும்
நமது கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள்



பாவையவள் கண்களில்
பாதிதான் உறக்கம்
வழிந்தோடும் விழிநீர்
கன்னத்தில் முத்தமிட்டது - அவள்
கனவுகளைக் குலைப்பது
கனவா? காதலா?
கண்டு கொள்ள முடியாமல்
திண்டாடுகிறாள் பேதை
கற்கத் துடிக்கிறது அவள் மனம்
கனவைக் கொடுக்கிறது அவள் தூக்கம்
பெற்றவரின் ஆசைக்காய் - மனதில்
பெற்றவனை மறக்க முனைகிறாள்
நினைக்கத் தெரிந்தவளுக்கு
சொல்லத் தைரியம் இல்லை
மறக்க முடியவில்லை
சொல்லாத காதலை
சொல்லாமலே விட்டு விட்டால்....
ஏங்கித் தவிக்கிறாள்
மற்றவரின் நம்பிக்கைக்காய்
மனதை மூடிவிட்டு
மௌனமாய் இருக்கிறாள்
இன்றுவரை.

**பள்ளிக்கூடம்**

படிக்கும் வரை வெறுக்கும்
பட்டம் கிடைத்தவுடன்
தன்னை நினைக்க வைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவளால்

பாதையோரம் நின்ற நான் - அவள்
பார்வையால் கைதியானேன்
பாவையவள் கூந்தலால்
பாசத் தோடு கட்டிக் கொண்டு
பாலைவனம் ஒன்றிலே
பட்டமர நிழலில் தஞ்சம் புகுந்தேன்
கனவில் அவளைக் காதலித்தேன்
காதலை அவளிடம் சொன்னபின்
காதலே கனவாகியது
கனவுகளை சுமக்க வைத்தாள் - அவள்
காதலிக்க வைத்தாள் - ஆனால்
கடைசிவரை நின்று விடாமல்
காற்றோடு பறந்து விட்டாள் - என்னை
மறந்து விட்டாள்.



**பிரிவு**

நிரந்தரமாவதும் தற்காலிகமாவதும்
உறவின் கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவளுக்கு

பூவின் மென்மையை பிடித்தவளுக்கு
முள்ளின்  கோபம் பிடிக்க வில்லை
கவிக்கு உயிர் கொடுத்தவளுக்கு - என்
காதலை வாழவைக்க தெரியவில்லை
அழகை ரசிப்பவளுக்கு
ஆணின் அன்பு புரியவில்லை
உண்மையை உணர்ந்தவளுக்கு
உலகம் இருளவில்லை

ஆசைப்பட்டவளுக்கு அதை
அடையத் தெரியவில்லை
என்னைப் பறித்தவளுக்கு என்
இதயம் பிடிக்கவில்லை
பெண்ணாகப் பிறந்த அவளுக்கு
காதலின் வலி தெரியவில்லை

**புத்தகம்**

எம் மனதை பொறுத்து
நண்பனாகவும் இருக்கலாம்
எதிரியாகவும் தெரியலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலையும் கரையும்

அலை வந்து தன்னை
அணைக்காதா? என்று
ஏங்கிய கரை
அலை வந்து தன்னைத் தொட்டதும்
அகிலத்தையே மறந்து கண் உறங்கிவிட்டது
கரை தன்மீது கொண்ட காதலை
எண்ணி எண்ணியே
"தொட்ட அலை"
கரையை அணைக்கத் தொடங்கியது
அலைக்கும் கரைக்குமிடையில்
இடைவெளி இல்லா விட்டாலும்
அலை வந்து போகும்
இடை வெளியில்
கரை மீது காதல் கொண்ட மழைத்துளி
கரை மீது விழுந்தது
அலையை அணைத்த கரை
தன் மீது விழுந்த
மழைத்துளியையும் தாங்கியது
அது இரக்கமா? காதலா?
அலைக்கு கரைமீது ஐயமில்லை
ஆனாலும்
அதை விட்டு விலகியது
தான் கொண்ட காதலோடு.

**முத்தம்**

அன்பின் வெளிப்பாடு ஆனால்,
எல்லோரிடமும் பரிமாற முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஊர்

யாழின் நாதமாக
"யாமிருக்க பயமேன்" எனும்
முருகேசன் மந்திரத்தை
மூச்சாய்க் கொண்டு
நல்லவர்கள் வாழும்
நந்தவனமடா - இது
அழகான கடற்கரை
அதில் ஆனந்தமாக பல ஓடங்கள்
வானுயர்ந்த சோலையிலே
வானை அளக்கும் தென்னை மரங்கள்
வரட்சி யென்றால் என்னவென்றே தெரியாத
வசந்தமான காலநிலை
இத்தனையும் சேர்ந்த
இயற்கையின் கொடையடா இது
கள்ளம் கபடமில்லாத
கடுஞ் சொற்களை
காதால் கூட கேளாத
கம்பர்கள் வாழ்ந்த
ஊரடா இது
முல்லைக்கு தேர் கொடுத்த
வள்ளலை விட
புறாவிற்கு தொடை கொடுத்த
மன்னனை விட
உதவி கேட்டு வருவோர்க்கு
உயிரைக்கூட கொடுக்கத் துணிந்த
உத்தமர்களடா
இந்த மண்ணின்
புத்திரர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார்?



பனியின் மோகத்தால்
படுக்கையிலிருந்த
கம்பளியால் போர்த்திக் கொண்டு
கண்களை இறுக மூடவும்
கடிகாரத்தின் "அலாரம்"
காதுகளுக்கிடையில் கனைக்க
அலாரமை நிறுத்தி விட்டு
ஆழமான தூக்கத்தை விரும்பிய
விழிகளுக்கு
புத்தகத்தை தூக்கு என்று
புன்னகைத்தது மனது
மனதிற்கும் விழிகளுக்கு மிடையிலான
மாண்பான போராட்டத்தில்
ஜெயிக்கப் போவது யார்?

**அன்பு**

அடக்கமாய் இருந்தால்
இன்பமாகவும்
புனிதமாகவும் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசித்திர விஞ்ஞானமும் வீணாகும் கலாச்சாரமும்

விஞ்ஞானத்தின் விசித்திரத்தால்
வியக்கத் தக்க மாற்றங்கள்
மாறிவரும் ஞாலத்தில்
மாக்களும் கூட கணனி இயக்கலாம்.....
உலகச் செய்திகளை
உடனுக் குடன் அறிய
உருவாகிய தொலைக்காட்சி
உருமாறி - இப்போது
சினிமா சீரியல்களை
சிறப்பாக வளர்க்கிறது
"சீரியல்" பார்த்தே
சீரழிந்து போகிறார்கள்
நம் குடும்பப் பெண்கள்
வேலைக்கு சென்று வரும் கணவனுக்கு
வேண்டா வெறுப்பாக சாப்பாடு
குழந்தையுடன் கொஞ்சி விளையாடுவதை விட
குறுந்தொடரில் தான் அவர்களது நாட்டம்
"கணவருக்காக".....
"மனைவி....." என்ற
தொடர் நாடகங்களை
தொடர்ந்து பார்க்கிறார்களே தவிர
தம் வாழ்க்கைக் கணவனுக்காக
தம் மனைவி என்ற ஸ்தானத்தை
கொடுப்பதாக இல்லை
எடுத்துக் காட்டாக இருக்க வேண்டிய
தாய்மார்களே T.V க்குள் இருந்தால்......
சேய்களைப் பற்றி சொல்லவே தேவையில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் பரிமாற்றத்தின்
தனிப்பட்ட ஊடகமான
தொலை பேசியை
தொல்லை பேசியாகவே மாற்றிவிட்டார்கள்
அவசர ஊடகத்தில்
ஆபாச படங்களைப் பொருத்தி
அசிங்கப் படுத்துகிறார்கள் நம் கலாச்சாரத்தை....

**இயற்கை**

இரசிக்கவும் செய்யும்
அழிக்கவும் செய்யும்.

***

**இறப்பு**

நிச்சயிக்கப்பட்டதும்
நிரந்தரமானதும்.

***

**இதயம்**


இடம் மாறாது ஆனால்
இடத்தை பொறுத்து
நினைவுகள் மாறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநாதை முதியவர்

முதிர்ந்து போன வயதிலும் - தன்
முகவரியைத் தேடுகிறார்
துணைவியவள் இருந்த வரை
துன்ப மென்பது கிடையாது
வளர்த்து விட்ட மக்க ளெல்லாம்
வளமான நாடுகளில்
வசதியாக இருந்த போதிலும்
வயோதிப வயதினிலே
"வா" என்று சொல்லி
வயிற்றுக்குச் சோறு போட
வாரிசொன்று இல்லை யென்று
ஏங்குகின்ற அவர் மனதிற்கு
ஏற்றவாறு ஆறுதல் சொல்ல
இவ் வையமதில்
இருப்பதுதான் யார்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நான் கண்ட தங்கா,

கடலலைகள் முத்தமிட்டு தாலாட்டும் கரை கொண்ட, எழிலும் வனப்பும் கொண்ட, சிற்றூராம் இன்பர்சிட்டி கிராமத்தில் அருமைத்துரை தெய்வகுலதேவியின் ஒரே மகள் தான் தங்கா என்ற செல்லப் பெயர் கொண்ட, கயல்விழி.

1992இல் பிறந்து 1996இல் இடம்பெயர்ந்து முல்லைத்தீவு மாத்தளன் பாடசாலை, செம்மலை மகாவித்தியாலயங்களில் படித்து மீண்டும் 2002ம் ஆண்டு ஊர் திரும்பி தற்போது யா/வடஇந்து மகளிர் கல்லூரியில் க.பொ.த.உயர்தரம் கலைப்பிரிவில் கல்வி கற்று வருகின்றார். படிக்கும் போது கவிதைப்போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி , தேவாரம், பண்ணிசைப்போட்டி எனப் பல்துறைகளிலும் சாதனை நிலை நாட்டி முதலிடங்கள் பெற்று, இன்று தன் ஆற்றல் மிகுதியினால் **"உப்புக்காற்றில் மலர்ந்த மலர்கள்"** எனும் கவிதைத் தொகுப்பை வெளியிடுகின்றார். இது எமது கிராமத்திற்கும், வாழும் மக்களுக்கும் பெருமை, புகழ், சிறப்பு தருகின்றது.

வாழ்க கயல்விழி
வளர்க அவள் கவிகள்.



க.சூரியகுமாரன்
முன்னாள் சமாசத் தலைவர்

அச்சமைப்பு: S.P.M.PPD. T.P:0774966997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org